கடவுள்துணை. 14549.

# நான்மணிக்கடிகை.

## மூலமும் உரையும்

"செந்தமிழ்"ப்பிரசுரம்—கரு.

இரண்டாம் பதிப்பு.

மதுரை

தமிழ்ச்சங்கமுத்திராசாலை

1911.

விலை அணு 3.

ஸ்ரீ

கடவுள் துணை.

விளம்பிநாகனார்

அருளிச்செய்த

# நான்மணிக்கடிகை

## மூலமும் உரையும்.

க மதிமன்னு மாயவன் வாண்முக மொக்குங்
கதிர்சேர்ந்த ஞாயிறு சககர மொக்கு
முதுநீர்ப பழனத்துத் தாமரைத தாளி
னெதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.

இதன்பொருள்; மதி மாயவனது ஒளிமுகம் ஒக்கும்; ஒளிசிறந்த ஞாயிறு அவனது சக்கரமொக்கும்; முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்கட் செவ்விமலரை மற்றவன் கண்ணொக்கும்; நிறம் காயாவின் புதுமலரை ஒக்கும்; என்றவாறு.

உ படியை *மடியகத் திட்டா னடியினான்
முக்காற் கடந்தான் முழுநில—மக்காலத்
தாப்பணித்† தாங்கிய குன்றெடுத்தான் சோவி
னருமை யழித்த மகன.

இ-ள்; உலகத்தைத் தன்வயிற்றின்கண் வைத்தானும், எல்லாவுலகையும் தன்சேவடியான் மும்முறையாற் கடந்தானும், முற்காலத்து ஆநி

---

* 'மடியகத் திட்டாண் மகவை' என்னுங் களத்திறமுரைத்தகாதைக் கண், மடி-வயிறென் [illegible] இதனையே எடுத்துக்காட்டினார் அடியார்க்குநல்லார்.

† 'தானிரை' எனவும் பாடம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

ரையைத் துயர்கெடுக்கவேண்டி மலையையெடுத்தானும், சோவென்னும் *குறும்பினருமையை அழித்தமகனும் முன்சொல்லிய மாயவன் ; எ-று.

இவையிரண்டும் கடவுள் வாழ்த்து.

---

## நூல்.

க எள்ளற்க வென்று மெளியரென் றென்பெறினுங்
கொள்ளற்க கொள்ளார்கை †மேற்பட—வுள்சுடினுஞ்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

இ-ள் ; எளியரென்று ஒருவரையும் என்றும் இகழாதொழிக ; எல்லாம்பெறினும் தான்சென்று கொள்ளத்தகாதார் கை மேற்படக் கொள்ளாதொழிக ; சிற்றிற்பிறந்தார் செய்த பிழை தன்னுள்ளத்தைச் சுடுகின்றதாயினும் அவரை வெகுளாதொழிக ; தனக்குத் தகுதியில்லாத சொற்களை ஆராயாது விரைந்து கூறாதொழிக ; எ-று. (க)

கொள்ளாரென்றது பகைவரென்றுமாம்.

உ பறைபட வாழா வசுணமா வுள்ளங்
குறைபட வாழார் ‡உரவோர்—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட்டாற் சாவதாஞ் சால்பு.

இ-ள் ; பறையொலித்தால் உயிர்வாழா அசுணமா¶ ; மனங்குறைபட உயிர் வாழார் அறிவுடையார் ; மிக்க காட்டின்கண் உள்ள மூங்கில்கள் நெற்பட்டபொழுதே சாம் ; அவைபோல, ஒருவன் தனக்குத் தகாத பழிச் சொற்கள் படவரிற் சாவது சால்பாவது ; எ-று. (உ)

---

*குறும்பு - அரண். சோவரணம் - அசுரர் நகரம் : என்ப.

† 'மேல்வர'

‡ 'உரவோ ரெனினு மடவோ ரெனினும்' என்றார் பதிற்றுப்பத்தினும் (அ-௩). உரம்-அறிவு 'உரமொருவற்குள்ள வெறுக்கை' என்னுந் திருக்குறளானுணர்க.

¶ அசுணம்-இசையறிவதோர் விலங்கு. (சிந்தாமணியுரை-பதுமை-உ௩எ) ஒருவன் முதற்கண் யாழிசையைக்கேட்பித்து, இஃது அவ்விசையின்பத்தே யின்புற்று மூழ்கியவாவில் வலியதோர் பறையை ஒலிக்க, அதன் வல்

ரு மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் *கெட்டறிப
கேளிரா னாய பயன்.

இ-ள் ; மணியினது நன்மையைக் கழுவி அறிவர்; பண்ணினையமைத்து ஏறியபின்னர் அறிவர் மாவினது நன்மையை ; குற்றம் அறுபடச் சுட்டறிவர் பொன்னினன்மையைக்காண்பார் : அதுபோலத் தாங்கள் கெட்டால் அறிவர் கேளிரானாய பயன் ; எ-று. (ரு)

சா கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றி
னொள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுட்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
†நல்லாள் பிறக்குங் குடி.

இ-ள்; கள்ளியின் வயிற்றின் அகில் தோன்றும் ; மானின் வயிற்றின் ஒள்ளிய அரிதாரம் தோன்றும் ; பெருங்கடலுட் பலபொருள்களையும் விலை

---

லோசையைக் கேட்கலாற்றாது இவ்விலங்கி னரியவுயிர் விட்டு நீங்கும் என்ப. இதனை 'மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா, தறைகொன்று மற்றத னருயி ரெஞ்சப், பறையறைந் தாங்கு'என்னும் நெய்தற்கலியானும், (உசு) அதற்கு நச்சினார்க்கினியர் 'வஞ்சனையாலே தான் வாசித்த யாழிசையைக்கேட்ட அசுணமாவை இவ்வின்பமுற்றதென்று அருள்பண்ணாதே, முன்புசெய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதனரிய உயிர் போம்படி பறையைத்தட்டினாற்போல' எனக்கூறிய உரையானும் அறிக. 'யாழ்நறையடுத்தவசுண நன்மாச்செவிபறையடுத்ததுபோலும்' (இராமாவதாரம்-அவையடக்கம்)என்பதூஉம் இதுபற்றிவந்தது.'இருஞ்சிறைத்தொழுதியார்ப்ப யாழ்செத், திருங்கல் விடரளை யசுண மோர்க்கும்' என்று அகப்பாட்டினும்(அஅ) வருதல் காண்க. 'அசுணங் கொல்பவர் கைபோ னன்று,மின்பமுந் துன்பமு முடைத்தே' என்பது நற்றிணை (ருoச)இன்பம் யாழிசைத்தலாலும் துன்பம் பறையொலிப்பித்தலாலுமெ கொள்க. "அச்சப்பொருளாவன 'வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை, முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ, யீற்றுமகண்மா வேக பாதங், கூற்றங் கோண்மா நன்றுறை யசுணம்' என்றுசொல்லப்பட்டாற் போல்வன" என மெய்ப்பாட்டியலுரையிற் (க) காணப்படுதலால் இது தீங்கிழைக்கும் வலியுடையதென்றும், அதுபற்றி அஞ்சத்தக்கதென்றும்,மலையின்கண் உறைவதென்றும் விளங்கிக்கொள்க. பிங்கலநூலார் இவ்வசுணத்தை 'அசுணமா விசையறி பறவை கேகயப்புள்' என்பதனாற் பறவையெனக் கூறுகின்றார். 'மறையிற்றன் யாழ்கேட்ட மானை' என வழங்கிய சான்றோர்க்கு இதனைப் புள் எனல் கருத்தில்லைப் போலும்!

* 'கேட்டினுமுண்டோ ருறுதி கிளைஞரை, நீட்டியளப்பதோர் கோல்' என்னுங் திருக்குறளை நோக்குக.

†'நல்லாளிலாதகுடி' என்னுங் திருக்குறளுரையையும்(கoருo)நோக்குக.

யாகப்பெறும் முத்தங்கள் தோன்றும்; அவைபோல, அறிவார்யார் நல்லறிவினை யுடையானொருமகன் பிறக்குங் குடியினை? எ-று. (௪)

எ கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மத—மெல்லெ
னருளிற் பிறக்கு மறநெறி* யெல்லாம
பொருளிற் பிறந்து விடும்†.

இ-ள்; மலையின்கட்பிறக்கும் ஒளியையுடைய மணி; மகளிரது மெல்லிய சொல்லின்கட் பிறக்கும் தன் மனத்தின்கட் களிப்பு; மெல்லென்ற அருளின்கட் பிறக்கும் நல்ல அறநெறிகள்; அவ்வற முதலாயின எல்லாம் பொருளின்கட் பிறக்கும்; எ-று. (௫)

அ திருவொக்குந் தீதி லொழுக்கம பெரிய
வறனொக்கு மாற்றி னொழுகல—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.

இ-ள்; தான் பிறந்த குலத்திற்குத் தீதுவாராமல் ஒழுகுமொழுக்கம் செல்வத்தோடொக்கும்; மிக்க அறஞ்செய்கையோடு ஒக்கும் நெறியின்கணின்று ஒழுகுமொழுக்கம்; பிறனொருவனைத் தனக்கு நட்பாகக்கொண்டுவைத்துப் பின்பு அவன்மாட்டுக் கண்மாறுதல் அவனைக்கொன்றதனோடு ஒக்கும்; தன்னை விரும்பாதார் மாட்டு அவரால் ஆகிய பயன் கருதிச் சேறல் புலையோடு ஒக்கும்; எ-று. (௬)

கூ கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
‡செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
காப்பார்க்கு மில்லை; துயில்.

இ-ள்; களவுகாணுதும் என்று சோர்வு பார்ப்பார்க்குந் துயிலில்லை; தன்னாற் காதலிக்கப்பட்டாளொருத்திமாட்டுத் தம்முள்ளம்வைப்பார்க்கும் அவளைக்கூடுமட்டுந் துயிலில்லை; ஒள்ளிய பொருளைத் தேடுவமென்பார்க்

* 'அறனுமருளுடையான் கண்ணதே யாகும்' என்பது சிறுபஞ்சமூலம்.

† 'பொருளாகு மெல்லாம்' என்பது திருக்குறள் ௧௦௰௨.

‡ 'சோப்பாமென்'

கும் அப்பொருள் கூடுமளவுந் துயிலில்லை; அக்கூடிய பொருளைப் பிறர் கொள்ளாமற் காப்பார்க்குந் துயிலில்லை; எ-று. (எ)

கO கற்றார்முற் றோன்று கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்று முறுமுதல்—தெற்றென
வல்ல புரிந்தார்க் கறந்தோன்று மெல்லாம்
வெகுண்டார்முற் றோன்று கெடும்.

இ-ள்; கற்றார்மாட்டுக் கழிந்தபொருட்கு இரக்கம்*தோன்றும்; அன்பு பட்ட பொருளைப் பெறுவதற்கு முயல்வார் மாட்டு அவ்வன்பு பட்டன தமக்செய்தாமைக் காரணந் தோன்றும்; தெளியப்பாவ முள்ளவாம் வினைகளைப்பயின்று பழகிவந்தார்க்கு அறவினை தோன்றும்; வெகுண்டார்க்கு எல்லா நன்மைகளுந் தோன்றும்; எ-று.

உறுமுத லென்பதனை 'உறுமது' என்றும், 'உசாவுதல்' என்றும் பாடம் ஓதுவாருமுளர். (அ)

கக நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்புங்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி
தானசெல் லுலகத் தறம்.

இ-ள்; நிலத்துக்கு அழகென்று சொல்லுவர் நெல்லையும் கரும்பையும்; குளத்துக்கு அழகென்று சொல்லுவர் தாமரைப்பூவை; அவைபோல, பெண்டிரழகிற்கு அழகாவது நாணுடைமை; ஒருவன் தனக்கழகாவது தான்செல்லும் உலகிற்குத் துணையாகச் செய்யப்பட்ட அறம்; எ-று. (கூ)

கஉ கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத்தி னாற்பிணிப்பர் மாநாகம்—கொந்தி†
யிரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

இ-ள்; தறியினிற் பிணிப்படுப்பர் யானையை; சினந்தணியும் வகை ‡மறை மொழியிற் பிணிப்படுப்பா மாநாகத்தை; அவைபோல, கழறித்

* 'இரங்கல் கழிந்தபொருட்டு மாகும்' என்பது தொல்காப்பியம் (உரி கூக).

† கொந்துதல்-எரிதல்:'கொந்தழல்' என்ப (சிந் கேம-அஅ): ஈண்டுச் சுடச்சொல்லுதலின மேற்று.

‡ 'மறைமொழி தானே மந்திர மென்ப' என்பது தொல்காப்பியம் (செய்-கஎகூ.)

தலை முதலாயினவற்றாற் பிணிப்படுப்பர் கீழ்மக்களை; இதத்தாற் பிணிப் படுக்க சான்றோரை; எ-று. (கo)

கங கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டு—மென்றும்
விடல்வேண்டுந் தன்கண் வெகுளி யடல்வேண்டு
மாக்கஞ் சிதைக்கும் வினை.

இ-ள்; பிறர் *அஞ்சத்தக்கவற்றின்கட் ‡டளம்பாதொழியவேண்டும்; தனக்குப் பிறர்செய்த நன்றியை மிகமனத்தின்கட் கொள்ளவேண்டும்; எஞ் ஞான்றுந் தன்மாட்டு வெகுளியை நீக்கவேண்டும்; தன் செல்வத்தைக்கேடு செய்யுஞ் செய்கையைக் கெடுக்கவேண்டும்; எ-று. (கக)

கச பல்லினா னோய்செய்யும் பாம்பெல்லாங் கொல்களிறு
கோட்டானோய் செய்யுங் குறித்தாரை யூடி
முகத்தானோய் செய்வர் மகளிர் முனிவர்
தவத்திற் றருக்குவர் நோய்.

இ-ள்; பல்லானே பிறரைத் துன்பஞ்செய்யும் பாம்பெல்லாம்; கொல் களிறு தான்கொலைகுறித்தாரைக் கோட்டானே துன்பஞ்செய்யும்; மகளிர் தங்காதலரைப் புலந்து முகத்தானே துன்பஞ் செய்வர்; அவைபோல, அருந் தவராய தமது தவத்தானே தம்மையிகழ்ந்தார்க்குத் துன்பத்தை மிகுவிப் பர் $; எ-று. (கஉ)

கரு பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரிற்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
றீர்தலிற் றீப்புகுத னன்று.

இ-ள்; வீக்குதலமையாத யாழோசையிற் பறையோசை நன்று; பெரு மையில்லாத ஆடவரின் நிறையுடைமையினின்ற பெண்ணே நன்று; ஒழுக்

* கடி-அச்சம்.

‡ தளம்புதல் - மானம் ஆழ்தல்.

$ தருக்கும் செருக்கும் மிகுதியையுங் குறித்துவரும்; "மிகுதியான் மிக் கவை செய்தாரை" (திருக்குறள்-கருஅ), 'கவறுங் கழகமுங் கையுந் தருக்கி' (ஷை-கூஙரு) 'மிகுதியிறுவாய செல்வங்கள்' (நான்மணி-கக, என்பவற்றுரை களான் உய்த்துணர்க.

கமழிந்துண்டலிற் பசித்தலேநன்று; அன்புபட்டாரினீங்குதலிற் றீயின்கட் புகுதலேநன்று; எ-று. (கரு)

கசு வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழா
மின்சொற் குழியி னினிதெழூஉம் வன்சொல்
கரவெழூஉங் கண்ணில் குழியி னிரவெழூஉ
மின்மைக் குழியின் விரைந்து.

இ-ள்; செல்வப்பாத்தியுள்ளே தோன்றி வளரும் ஈகை; இன்சொற் பாத்தியுள்ளே இடையூறின்றியே தோன்றிவளரும் தன்சுற்றக்குழாம்; கண்ணோட்டமில்லாத பாத்தியுட் கடுஞ்சொல்லும் காத்தலும் தோன்றிவளரும்; வறுமைப்பாத்தியுட் டோன்றிவளரும் இரப்பு; எ-று. (கசு)

கஎ இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

இ-ள்; ஒருவன் தனக்குப் பொல்லாப்பு வேண்டின் இரப்பினைத் தொடங்குக; இவ்வுலகின்கண் என்றும் உளனாகவேண்டிற் புகழை நிறுத்துக; தன்னொடு மறுமைக்குத் துணையாகச் செல்வதனை வேண்டினானாயின் அறத்தைச் செய்க; வென்றியை வேண்டினானாயின் வெகுளியைத் தவிர்க; எ-று.

கஅ கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்.

இ-ள்; கடலினாழத்தை ஊடறுத்துச்செல்வர் நாவாயினை யுடையார்; சேனையினருமையை வென்றுசெல்லும் பாய்மாவினையுடையவன்; குற்றமில்லாத தவத்தினருமையைத் தன்மனத்தினைத் தனக்கெனவுடையான் நீந்திக்கடக்கும்; அவையினதருமையைக் கற்றுவல்லவன் வென்றுவிடும்; எ-று. (கஅ)

கசு பொய்த்த லிறுவாய நட்புக்கண் மெய்த்தாக
மூத்த லிறுவாய்த் திளநலந்—தூக்கின்
மிகுதி யிறுவாய செல்வங்க டத்தந்
தகுதி யிறுவாய்த் துயிர்.

இ-ள்; வஞ்சித்தலை ஈறாகவுடையவாயிருக்கும் நட்புக்கள்; மெய்ம்மையாக மூத்தலைத் தனக்கிறுவாயாக வுடைத்து இளமை நலம்; ஆராய்தலையில்லாத செருக்கினை இறுவாயாக வுடையவா யிருக்கும் செல்வங்கள்; தம்முடைய ஒழுக்கங்களை இறுவாயாகவுடையது உயிர் வாழ்வு; எ-று. (கஎ)

உ0 மனைக்காக்க மாண்ட மகளி ரொருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னாதல்—சினச்செவ்வே
லாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கங்
கேளி ரொரீஇ விடல்.

இ-ள்; ஒருவனது மனைக்குச் செல்வமாவது மாட்சிமையுடைய மகளிருளராதல்; ஒருவனது காரியத்துக்கு ஆக்கமாவது செப்பமுடையவனாதல்; நாட்டுக்கு ஆக்கமாவது அந்நாட்டை ஆளுஞ் சினச்செவ்வேலையுடைய வேந்தன் நல்லனென்று பிறரால் சொல்லப்படுதல்; ஒருவன் கேட்டுக்கு ஆக்கமாவது தன் சுற்றத்தாரை மேவாது நீங்கிவிடுதல்; எ-று. (கஅ)

உக *பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னா டானதிர்க்குங்
கற்றா னதிர்ப்பிற் பொருளதிர்க்கும்—பற்றிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்ப்பிற்
பாட லதிர்ந்து விடும்.

இ-ள்; தன் கொழுநன் ஒழுக்கத்திற் கலங்கினனாயின் அவன் மனையாளும் அவன் வழியினளாகலான் அவளுங் கலங்கும்; கற்றான் கலங்குமாயின் அவன் கற்ற நூலுங்கலங்கும்; தன்னான் ஆளப்படுகின்ற நாடு நெறியில்லாது கலங்குமாயின் அரசன் செங்கோலுங் கலங்கும்; யாழின்கண் வீக்கங் கலங்குமாயிற் பாடலுங் கலங்கும்; எ-று. (கக)

உஉ மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
வவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

இ-ள்; தன்மனைக்குப் பாழாவது மனையாளை இல்லாமை; தான்செல்லக்கடவ திசைக்குப் பாழாவது தன்னொடு நட்புடையாரை இல்லாமை; தானிருந்த அவைக்குப் பாழாவது அறிவான் முதிர்ந்தாரை இல்லாமை; தனக்குப்பாழாவது கற்றுணர்வில்லாத வுடம்பு; எ-று. (உ0)

---

* பெற்றான்-கொழுநன்: "பெற்றாற்பிழையாத பெண்டிரும்" என்றார் 'மாநிலந் தோன்றாமை' என்னும் பரிபாடலினும்.

௨௧ மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்குங்
கூடார்கட் கூடி விடின்.

இ-ள்; பெருமையை அழிக்கும் ஒற்றுமையின்மை; ஒருவனைத் தன் பொன்போலு மேனியைத் தானுரைக்கும்பொய் கெடுக்கும்*; பாலினது சுவையைப் பால்பெய்த பொல்லாக்கலங் கெடுக்கும்; தான்பிறந்த குலத்தைக் கெடுக்கும் தனக்கினமல்லாதாரை இனமாகக் கூடின்; எ-று. (௨௧)

௨௪ புகழ்செய்யும் பொய்யா விளக்கம்† மிகழ்ந்தொருவன்
பேணுமை செய்வது பேதைமை—காணுக்
குருடராச் செய்வது மம்ம ரிருடீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு.

இ-ள்; ஒருவன் பொய்சொல்லாமை யென்னும் விளக்கம் அவற்குப் புகழை விளைக்கும்; ‡யாதனையு மிகழ்ந்து பாதுகாவாமையைச் செய்வது ஒருவன தறியாமை; யாதொன்றனையும் உண்மைகாணுக் குருடராய்ச் செய்வது கல்லாமை; மயக்கந் தீர்ந்த கண்ணுடையராகச் செய்வது கல்வி; எ-று.(௨௨)

௨௩ மலைப்பினும் வாரணந் தாங்குங் குழவி
யலைப்பினு மன்னையென் றேடுஞ்$—சிலைப்பினு
நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டா
ருடனுறையுங் காலமு மில்.

இ-ள்; மேல்வலிதாகிய பகைவந்து தன்னைமலைப்பினும் யானை போரைத்தாங்கும; குழவியைத் தாயலைப்பினும் அக்குழவி அன்னையென்று

※ பொய்த்தபிற் றன்னெஞ்சே தன்னைச்சுடுமாதலால் இவ்வாறு கூறினார்.

† ‘பொய்யாமை யன்ன புகழில்லை’ ‘பொய்யா விளக்கே விளக்கு’ எனத் திருக்குறளிற் கூறியவாறு காண்க.

‡ ‘யாதொன்றும் பேணுமை பேதை தொழில்’ என்ப. (திருக்குறள்-அ௩௩.)

$ ‘தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட், டன்ன யென்னுங் குழவி’ என்றார் குறுந்தொகையினும் (௩௯௭).

அவள்பின்னே செல்லும்; நட்டாரோடு நட்டார் வெகுண்டு வினைசெய்வா ராயினும் அவர் நடுங்கும் வினை செய்யார்; பொருந்தாதார் ஒருவகையாற் பொருந்தினாராயினும் மனத்தாற் பொருந்தி யுடனுறையுங் காலமுமில்லை; எ-று. மேற்கொண்டவன் மலைப்பினும் என்றுமாம். (௨௫)

௨௬ நகைநல நட்டார்க ணந்துஞ் சிறந்த
அவைநல மன்பின் விளங்கும்*—விசைமாண்ட
தேர்நலம் பாகனாற் பாடெய்து மூர்நல
முள்ளானா லுள்ளப் படும்.

இ-ள்; நகையினது நன்மை நட்டார்மாட்டுச் சிறக்கும்; அவையினது நன்மை மாறுபாடின்றி அன்புடைத்தாமாயின் விளங்கும்; †விசைமாட்சி மைப்பட்ட தேரினதுநலம் ஊரும்பாகனாற் பெருமையெய்தும்; ஊரினது நலம் அவ்வூர்க்கு முதன்மையுடையவன் நன்மையானேநினைக்கப்படும்; எ-று.

௨௭ அஞ்சாமை யஞ்சுக வொன்றிற் றனக்கொத்த
வெஞ்சாமை யெஞ்சு மளவெல்லா—நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினு நாடாமை
நட்டார்கண் விட்ட வினை.

இ-ள்; பழி முதலாயினவற்றை அஞ்சாமையை அஞ்சுக; பொருந்து மாயிற் றனக்குத் தகுதியாகிய ஒழுக்கங்களைத் தான் இறக்குமளவும் தவிரா தொழிக; தன்மனம் அறியக் கோடாதொழிக, கோடி பொருள்பெற்றானாயி னும்; ஆராயாதொழிக, தனக்கு நட்டாராயினார்மாட்டுத் தான் செய்யவிட்ட காரியத்தை; எ-று.

அல்லதூஉம் நட்டாரோடுகூடிச் செய்யாத வினையை நாடாதொழிக வென்றுமாம். (௨௬)

௨௮ கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

இ-ள்; அரசன் செங்கோனோக்கி வாழும் உலகத்துக்குடிகளெல்லாம்; பெற்றதாயினது முலைப்பாலனோக்கி வாழும் குழவிகளெல்லாம்; வானத்தின்

---

* 'அறனிலை திரியா அன்பி னவையத்து' என்பது புறம்-௭௧.

† விசை-செலவு; 'கடுவிசைக்கதநாய்' என்பது புறம்-௨0௫.

கணுள்ள துளியினை நோக்கி வாழும் உலகமெல்லாம்; அவ்வுலகின் சாக்காட்டினை நோக்கி இன்புறாஉம் கூற்றம், எ-று. (உசு)

உசு கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும் கோளுணர்ந்தாற்
றத்துவ மான நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பா
லுயர்ந்த வுலகம் புகும்.

இ-ள்; ஒருவன் கற்கவே மிகவும் பேதைமை குறையும்; பேதைமை குறையப் புல்லறிவுதீர்ந்து இவ்வுலகத்துள்ள இயற்கையையறியும்; அவ்வியற்கையை யறிந்தான் மெய்ம்மையாகிய வீட்டுநெறியின்கட் செல்லும்; அச்செல்லப்படுகின்ற நெறியானே இவ்வுலகின்கட் புகழை நிறுத்தி உப்பக்கத்து உயர்ந்த வீட்டுலகம் புகும்; எ-று. (உஎ)

௩0 குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவ—மழித்துச்
செறுவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

இ-ள்; குழித்த நிலத்துள்ளே நிற்பது நீர்க்கியற்கையாவது; பல்லோரும் பழிக்கபபட்டவன்மாட்டே பாவம் நிற்பது; தனக்கு நண்பாயினார் அழித்துத்தடுக்கவும் தான் சென்றுழிச்செல்வது காமமாவது; தனக்கு ஒரு துன்பம் வந்துற்றால் அவ்விடத்தே வந்துதவிநிற்பது அறிவு; எ-று. (உ௮)

௩க திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—யெற்றுள்ளு
மின்மையி னின்னாத தில்லை* யிலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.†

இ-ள்; செல்வம்போல் ஒருவற்கு வலியுடையது பிறிதில்லை: கல்வி போலப் பயன்படுவன பிறவில்லை; யாதனுள்ளும் இன்மைபோல இன்னாதது ஒன்று இல்லை; யாதொரு பொருளும் இலமென்று பிறரையிரக்கும் வன்மைபோல் வலியதிறனில்லை; எ-று.

---

* 'இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி, னின்மையே யின்னாதது' (திருக்குறள்-௧0௪௧.)

† 'இரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்டதில்' (ஷை ௧0௬௩) 'வன்பட்டதில்' எனவும் பாடம்.

அல்லதூஉம் இரந்துசென்றார்க்கு யாதும் இலமென்று மறுக்கும் வன்மைபோல வலியதிறமில்லை யென்றுமாம். (உக)

௩௨ புகைவித்தாற் பொங்கழ றோன்றுஞ் சிறந்த
நகைவித்தாற் றோன்று முவகை—பகையொருவன்
முன்னம்வித் தாகி முளைக்கு முளைத்தபின்
னின்னாவித் தாகி விடும்.

இ-ள்; புகை காரணமாக ஓங்குநெருப்பு உண்டென்று அறியலாம்; ஒருவன் மாட்டுள்ள முறுவல் காரணமாக அவன் மனத்துள்ள உவகை தோன்றும்; ஒருவன் செய்த இன்னாக்குறிப்புச் செய்கைகளான் அவன் மனத்துள்ள பகைமை வெளிப்படும்; அப்பகைமை பின்பு இன்னாமைகளுக்குக் காரணமாகத் தோன்றும; எ-று. (௩௦)

௩௩ பிணியன்னர் பின்னோக்காப் பெண்டி ருலகிற்
கணியன்ன ரன்புடைய மாக்கள்—பிணியயிலும்
புல்லன்னர் புல்லறிவி னாடவர் கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்

இ-ள்; ஒருவர்க்கு உற்றநோயோடு ஒப்பர் பின்புவரும் பழியை ஆராயாது செய்யுமகளிர்; உலகத்திற்கு அலங்காரத்தை ஒப்பர் எல்லா வுயிர்க்கும் அன்புடைய மக்கள்; பிறர்க்குப் பிணியை வருவிக்கும் நச்சுப்புல்லோடு ஒப்பர் புல்லியவறிவினையுடைய ஆடவர்; கல்லோடு ஒப்பர் வலிய நெஞ்சத்தையுடையார்; எ-று. (௩௧)

௩௪ அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினுந்
தாயிற் சிறந்த தமரில்லை யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணி
னிளமையோ டொப்பது மில்.

இ-ள்; மறையவர் பிறப்புப்போல மிக்க பிறப்பு இல்லை; எல்லா நன்மையுஞ் செய்தாராயினும் தாயைப்போல மிக்க தமர் இல்லை; செல்வத்தோடொக்கும் அழகு மற்றியாதும் இல்லை; ஆராயின் இளமைக்காலம்போல எல்லாநன்மையும் முடிக்கலாவது பிறிதொன்றுமில்லை; எ-று. (௩௨)

௩௫ *இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பி
னீருண்டார் நீரால்வாய் பூசுப—தேரி
னரிய வரியவற்றாற் கொள்ப பெரிய
பெரியாரா னெய்தப் படும்.

* "அயிலானே போழ்வ ரயில்" என்பது பழமொழி (௩௩௭).

இ-ள்; இரும்பாற்செய்த கருவிகளானே இரும்பினை இடையே போழ்வர்; பெருஞ்சிறப்பினையுடைய நீரினையுண்டார் நீரானே அந்நீரினையுண்டவாயினைப்பூசுவர்; ஆராயிற் பெறுதற்கரிய பயன்களைப் பெறுதற்கரிய காரணங்களான் முடித்துக்கொள்வர்; பெரியவாயுள்ள சிறப்புக்கள் பெரியாரான் எய்தப்படும்; எ-று. (௩௩)

௩௪ மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
வறக்களி யில்லாதார்க் கீயுமுற் றோன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங் கயக்களி
யூரிற் பிளிற்றி விடும்.

இ-ள்; வீரத்தான் வருங் களிப்புச் சேவகர்க்குத் தம்மையாண்ட அரசர் முன்பு தோன்றும்; ஒருவன் மனத்தின்கண் மிக்க அறக்களிப்பு வறுமையுற்றார்க்கு உதவுமிடத்துத் தோன்றும்; எஞ்ஞான்றுஞ் செல்வராயினார் தம்மையொன்று ஏவினால், அவ்வேவலான் வருங் களிப்பு நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்றும்; கயமையான்வருங் களிப்புத் தான்வாழும் ஊரின்கட் டோன்றி ஆரவாரம் பெருக்கிவிடும்; எ-று.

அல்லதூஉம் 'வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாம்' என்பது, யாதானும் ஒரு பொருள் பெற்றால் அதனைக்கண்டு வியக்குங்களி நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்று மென்றுமாம். (௩௪)

௩௭ மையாற் றளிர்க்கு மலர்க்கண்கண் மாவிரு
ணெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர்—பெய்ய
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

இ-ள்; அஞ்சனத்தாற் றளிர்க்கும் மலர் போன்றிருந்த கண்கள்; பேரிருளின்கண் நிமிர்ந்தெரியும் விளக்கு நெய்பெற்றாற் றளிர்க்கும்; பெய்தற்கு முழங்கவே தளிர்க்குங் குருகிலை; நட்டார்க்குப் பொருள் வழங்கத் தளிர்ப்பர் மேலாயினார்; எ-று. (௩௫)

௩௮ நகையினிது நட்டார் நடுவட் பொருளின்
றொகையினிது தொட்டு வழங்கிற்—றகையுடைய
பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

இ-ள்; நட்டார் நடுவணிருந்து நகையினிது; பொருளின்கூட்டம் இனிது தொட்டுவழங்குவானாயின்; சிறப்புடைய பெண்ணினிது தன்கொழு

MAHAMAHOPADHYAYA
... SWAMINATHA IYER LIBRARY

னைப் பேணி வழிபடின்; பண்ணினிது பாட்டின் றொழிலை அறிவாரிடத்து; எ-று. (௩௯)

௩௯ கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்று
மிரப்பவர்க்குச் செல்சாரொன் றீவோர்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சார் வுயிர்க்கு.

இ-ள்; கரப்பவர்க்குப் பற்றுக்கோடு முகங்கவிழ்தல்; எஞ்ஞான்றும் இரப்பவர்க்குப் பற்றுக்கோடாவார் யாதானும் ஒன்றனைக்கொடுப்பார்; பரப்புநிரம்பிய சேனைக்குப் பற்றுக்கோடு தறுகண்மை; ஒருவனுயிருக்குப் பிறவுயிர்களுக்குப் பற்றுக்கோடு ஊனுண்ணாமை; எ-று. (௩௭)

௪௦ கண்டதே செய்பவாங் கம்மிய ருண்டெனக்
கேட்டதே செய்ப புலனாள்வார்—வேட்ட
வினியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னிய செய்யுந் திரு.

இ-ள்; தாங் கண்ணாற்கண்டதனையே செய்யவல்லாராங் கம்மியர்; உண்டென்ற நூலை நெறியாற்கேட்டதனையே செய்வர் அறிவினையாள்வார்; தாங் காதலித்தனவற்றுள் எல்லார்க்கும் இனியனவற்றையே செய்வர் குணங்களானமைந்தார்; சினமில்லாதார் கருதினவற்றையே செய்யும் திருமகள்; எ-று. (௩௮)

௪௧ திருவுந் திணைவகையா னில்லா பெருவலிக்
கூற்றமுங் கூறுப செய்துண்ணா—தாற்ற
மறைக்க மறையாதாங் காம முறையு
மிறைவகையா னின்று விடும்.

இ-ள்; செல்வங்களும் குடிப்பிறப்பி னன்மையான் நில்லா; பெருவலியையுடைய கூற்றமும் தானுண்ணப்படுகின்றவன் சொல்லுவனவற்றைச் செய்து உண்ணா; மிகவும் மறைப்ப மறைவுண்ணாது காமமும்; முறைமையும் அரசன் வகையானே நிற்பது; எ-று. (௩௯)

௪௨ பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங்கா
னில்லெனவு நில்லா வுயிரெனைத்து—நல்லா
ளுடம்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதில்
கண்டனவுங் காணா கெடும்.

இ-ள்; உயிரெல்லாம் பிறக்கும் பொழுது தவிரெனவுந் தவிரா; இறக்கும் பொழுது நிற்கவெனவும் நில்லா; திருமடந்தை மனமகிழ்ந்து உடம்படிற் செல்வந் தானே பெருகும்; அச்செல்வங் கெடும்பொழுது காணப்பட்டுள்ளவாய்நின்ற பொருளுங் காணப்படாவாய்க் கெடும்; எ-று.

சங போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லா—நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும்.

இ-ள்; போரின்றிவிடிற் பொருபடையாளர் சீர்மையழியும்; கீழ் வீழ்ந்த வேருமாயின் மரங்களெல்லாம் உலரும்; நீர்பாயும் மடையின்கண் நீரறின் நீண்ட நெய்தன் மலர்கள் உலரும்; சேனையின்றிவிடின் அரசர் சீர்மை வாடும்; எ-று. (சக)

சச ஏதிலா ரென்பா ரியல்பில்லார் யார்யார்க்குங்
காதலா ரென்பார் தகவுடையார்—மேதக்க
தந்தை யெனப்படுவான் றன்னுவாத்தி தாயென்பாண்
முந்துதான் செய்த வினை.

இ-ள்; ஒருவர்க்கு அயலாராவார் குணமில்லாதார்; யாவர்க்கும் அன்புபடப்படுவார் குணமுடையார்; விரும்பத்தக்க தாதை யெனப்படுவான் றன்னை ஓதுவித்தவன்; தாயென்பாண் முற்பிறப்பிற் முன்செய்த நல்வினை; எ-று. (சஉ)

சரு பொறிகெடு நாணற்ற போழ்தே நெறிபட்ட
வைவராற் றனே வினைகெடுட் பொய்யா
நலங்கெடு நீரற்ற பைங்கூழ் நலமாறி
னண்பினார் நண்பு கெடும்.

இ-ள்; செல்வங்கெடும் ஒருவற்கு நாணின்றி ஒழிந்தபொழுதே; தன் வயத்தனவாய் வழிப்பட்ட ஐவகைப்பொறிகளாலும் பிறப்பிற்குக் காரணமாகிய வினைகெடும்; பழுதுபடாத விளைவினலங் கெடும் நீரற்ற பைங்கூழ்; மனத்தின்கண் உளதாம் ஈரந்துவரின் நண்புடையார் நண்பு கெடும்; எ-று.

அல்லதூஉம் 'பொறிகெடு நாணற்ற போழ்தே' என்பது*கயிறற்ற பொழுதே †பாவையாகிய பொறிகெடும் என்றுமாம். (சரு)

---

* யந்திரக்கயிறு. † மரப்பாவை. "மரப்பாவை நாணா லுயிர்மருட்டி யற்று" என்புழிக் காண்க (திருக்குறள்-க0உ0). "பொறியறு பாவையிற் பொம்மென விம்மி" என்பது சிந்தாமணி (நாம-௩0௪).

சசு நன்றிசா நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விருப்பிலார் முற்சா மரும்புணர்ப்பிற்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்ன ரூடல்சா
மூட லுணரா ரகத்து.

இ-ள்; செய்த நன்றியை அறியாதாரிடத்துச் செய்த நன்றிகெடும்; விருப்பிலாரிடத்துச் சென்ற விருந்து வாடும்; அரிதாகப் புணர்ந்த புணர்ப்பினையுடைய பாடல்கெடும். பண்ணினையறியாதார்முன்பு; ஊடியவூடலுங் கெடும், ஊடியவற்றை உணராதொழிந்தார் மாட்டு; எ-று. (சச)

சஎ நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கி
னகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்ன
முகம்போல முன்னுரைப்ப தில்.

இ-ள்; மலருண்டென்பதனை அம்மலரினது நாற்றமே அறிவிக்கும்; ஒருவன் சொல்லியசொல்லே அறிவிக்கும் அவன் செய்கை நலத்தினை; ஆராயின் உட்கிடந்த தீமையை மனமே அறிவிக்கும்; மனத்தின் விளைவினை முகம்போல முற்படவறிவிப்பது மற்றொன்றில்லை; எ-று. (சரு)

சஅ மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையுந்
தவமிலா ரில்வழி யில்லை தவமு
மரசிய லில்வழி யில்லை யரச
னில்வாழ்வா னில்வழி யில்.

இ-ள்; மழையின்றிவிட்டால் உலகத்தின் மக்கட்கு உணவில்லை; அம் மழைதானும் தவஞ்செய்யாதார் இருப்பிடங்களுள் இல்லையாம்; அத்தவஞ் செய்கைதானும் அரசின்முறைமை இல்லாத அரசரிருப்பிடங்களுள் இல்லை; அவைபோல, இல்லையாம்: அவ்வரசன்றானும் குடிகளில்லாத விடங்களுள்; எ-று, (சசு)

சகூ பூவினு னந்தும் புனைதண்டார் மற்றதன்
றாதினு னந்துஞ் சுரும்பெல்லாந்—தீதில்
வினையினு னந்துவர் மக்களுந் தத்த
நனையினு னந்து நறா.

இ-ள்; பூவினுன் மிக்குப் பொலியும் புனையப்பட்ட தண்டார்; அப்பூ வின் றாதினுன் மிக்குப்பொலியும் வண்டெல்லாம்; குற்றமில்லாத செய்

14547



கைகளான் மிகுவர் மக்களும்; தத்த நினைகொள்கையான் மிக்கு நல்லவர்கள்; எ-று. (௪௯)

௫௰ சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூ ணிரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கு மரிது.

இ-ள்; தொடர்ச்சி மிக்கார்க்கு அரியசெறுதல்; எஞ்ஞான்றும் பிறந்தார்க்கு அரிய தம்மினத்தைத் துறந்து வாழ்தல்; உணவினை வரைந்தார்க்கு அரிய பிறர்க்குப் பகுத்துண்டல்; இரந்து வந்தார்க்கு அரியதாமொன்றினை இல்லை யென்றல் யாவர்க்கும் அரிது; எ-று. (௫௰)

௫௧ இரைசுடு மின்புறு யாக்கையுட் பட்டா
லுரைசுடு மொண்மை யிலாரை—வரைகொள்ளா
முன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையுந்
தன்னடைந்த சேனை சுடும்.

இ-ள்; இரை........பட்டால் எ-து பிணியினாற் றுன்பமுறுகின்ற உடம்பின்கட்பட்டவுணவு துன்பத்தைச் செய்யும் எ-று. உரை......யிலாரை எ-து அறிவினொண்மையிலாதார் தம்வாயிற் சொல்லே தங்களைத்துன்பம் உறுத்தும் எ-று. வரை......சுடும் எ-து முற்காலத்துச் சீலங்களை வரைந்து கொள்ளாது நெறியைக்கடந்து செய்த தீவினைகள் பிற்காலத்து வந்து சுடும் எ-று. வேந்தனை......சுடும் எ-து வரைகொள்ளாத தன்னடைந்த சேனை வேந்தனைச்சுடும் எ-று; இதற்கு முன்சொன்ன வரைகொள்ளா என்னுஞ்சொல்வருவித்துரைக்கப்பட்டது. (௫௧)

௫௨ எள்ளற் பொருள திகழ்த லொருவனை
யுள்ளற் பொருள துறுதிச்சொ—லுள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலுந்
தேர்தற் பொருள பொருள்.

இ-ள்; ஒருவற்கு இகழத்தக்கது பிறரை யிகழும் இகழ்ச்சி; ஒருவனை நட்பென்று உள்ளத்தகுவது அவன் சொல்லும் உறுதிச்சொல்லால்; உண்மையறிந்து அடையத்தக்கது அறநெறி; எப்பொழுதும் ஆராயத்தக்கன சகல நூல்களினுஞ் சொன்ன பொருள்கள்; எ-று. (௫௨)

ருங யாறு ளடங்குங் குளமுள வீறுசான்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

இ-ள்; யாறுகள் புகுந்தாலும் புறம்போகாது உள்ளடங்கும் குளங்களுமுள; சிறப்பமைந்த அரசரான் விரும்பப்படுங் குடிகளுமுள; பழைய மரபினையுடைய வேதங்களைப்போலும் பாட்டுக்களுமுள; யாகம்போலும் ஈகைகளுமுள; எ-று. (ருங)

ருச எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பா
னொருதொடையான் வெல்வது கோழி—யுருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணொன்ப * சேனைச்
செறிவுடையான் சேனா பதி.

இ-ள்; எருதுடையான் வேளாளனாவான்; ஓரொற்றான் † வெல்வதாயுள்ள கோழிபோல ஒருவரோடு என்றும் மாறுபடாதான் பார்ப்பானாவான்; வடிவழகும் அறிவுமுடையாள் ஒருவற்கு இல்வாழ்க்கையுடைய பெண்ணாவாள்; சேனையொடு மேவியிருப்போன் சேனாபதியாவான்; எ-று. (ருச)

ருரு யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்
கடும்பரிமாக் காதலித் தூர்வர் கொடுங்குழை
நல்லாரை நல்லவர் நாணுவப்பா ரல்லாரை
யல்லா ருவப்பது கேடு.

இ-ள்; யானையுடையார் யானையினது சினத்தையுவப்பார்; அரசராயினோர் கடிய செலவினையுடைய குதிரையைக் காதலித்து மேற்கொள்வர்; கொடுங்குழையையுடைய நல்லாரை நல்லார் நாணுவப்பர்; நாணுடையரல்லாத மகளிரை அறிவுடையரல்லாதார் உவந்தாற் கேடாம்; எ-று. (ருரு)

ருசா கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானிற்
றுன்னிய கேளிர் பிறரில்லை மக்களி
னொண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளோ
டெண்ண கடவுளு மில்.

---

* 'சேனைச்செறிவு' என்பதும் பாடம்.
† எற்றுதல் - காலாற்றள்ளுதல்: 'ஓரொற்றான்' என்பதும் பாடம்.

இ-ள்; ஒருவற்குக் கண்போலச்சிறந்த உறுப்புப் பிறிதொன்றில்லை; தம்மைக்கொண்டானைப்போலச் செறிந்த சேணிர் மகளிர்க்கில்லை; புதல்வரைப்போல நன்மைநெறியமைந்த பொருளில்லை; தன்னை யீன்றாள்போல் வதோர் தெய்வம் எத்தெய்வத்துள்ளும் இல்லை; எ-று. (ருச)

ருஎ கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றாரைச் சேர்ந்தவர்—தெற்றென
வுற்ற துரையாதா ருள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னார்.

இ-ள்; கற்றாரனையர் அக்கற்றாரைக் காதலிப்பவர்; ஒருயிர்க்குங் கண்ணோட்டமில்லார் இடும்பைசெய்வாரோடு ஒப்பர்; அவரைச்சேர்ந்தொழுகுவார் தெளியத்தந்நட்டார்க்கு உறுதியாயினவுரையாதார்; உள்கரந்து பாம்புறையும் புற்றேயனையர் புல்லறிவினார்; எ-று. (ருரு)

ருஅ மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே—யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்.

இ-ள்; அறிவான் மாட்சிமைப்பட்டார் மாட்சிமைப்பட்ட செயல்களைப் பெறுவர்; அம்மாட்சிமையை வேண்டாதார் தமக்கு விருப்பமில்லாத வினைப்பயன்களையும் பெறுவர்; எக்காலமும் மக்கட்பிறப்பிற் பிறப்பாரெல்லாரும் அறத்தையே விரும்புவார்; துறக்கத்தை வேண்டுவார் துறப்பார்கள்; எ-று. (ருசு)

ருகூ என்று முளவாகு நாளு மிருசுடரு
மென்றும் பிணியுந் தொழிலொக்கு—மென்றுங்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாருஞ்
சாவாரு மென்று முளர்.

இ-ள்; எக்காலத்தும் இடையறாது உளவாம் நாண்மீன்களும் இருசுடரும்; இறந்தநாள்களும் பிணிவருநாள்களும் உழவுமுதலான தொழில்களும் எல்லாமொக்கும்; எக்காலத்தும் கொடுப்பாருங் கொள்வாரு முளர்; பிறப்பாருஞ் சாவாரும் எக்காலத்தும் உளராவர்; எ-று.

எனவே உலகினது இடையறுமை யுணர்த்தியவாறு. (ருஎ)

௬0 இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனொழிந்து வாழ்வான்
றனிய னெனப்படுவான் செய்தநன் றில்லா
னினிய னெனப்படுவான் யார்யார்க்கே யானு
முனியா வொழுக்கத் தவன்.

இ-ள்; இனிதாக உண்பானென்று சொல்லப்படுவான் ஒருயிரையுங் கொல்லாதே உண்பான்; எல்லாராலும் வெறுக்கத்தக்கானென்பான் முகந் திரிந்து வாழ்வான்; துணையில்லானென்று சொல்லப்படுவான் தான்செய்த தொரு நல்வினையில்லாதான்; எல்லார்க்கும் இனியனெனப்படுவான் யாவர்) யாவர்க்கேயாயினும் வெறுக்கத்தகாத செய்கையையுடையான்; எ-று. (௫அ

௬௧ ஈத்துண்பா னென்பா னிசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் * காங்கியெனப்படுவான் றெற்ற
நகையாகு நண்ணார்முற் சேறல் பகையாகும்
பாடறியா தானை யிரவு.

இ-ள்; பிறர்க்குக்கொடுத்துண்பானென்று சொல்லப்படுவான் புகழை நிறுத்துவான்; கொடுத்துண்பவன் கைப்பொருளையுண்பான் அவாமிக்கா னெனப்படுவான்; தெளியவேஇகழ்ச்சியாம் தன்னைவிரும்பாதார் முன்னர் ஒன்றனை நச்சிச்சேறல்; தகுதியறியானைச் சென்றிரந்தாற் பகையாகும்;எ-று.

௬௨ நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழல் சேர்ந்து
வழுத்த வரங்கொடுப்பர் நாகர் தொழுத்திறந்து
கன்றாட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றாட்ட நந்தும் விருந்து.

இ-ள்; நெய்யைப்பெய்ய நெருப்புச்சுடர் வளரும்; அடைந்துபோற் றத் தேவர் வரங்கொடுப்பர்; தொழுவைத்திறந்து கன்றுகளை யூட்டக் கறவைகள் நந்தும்; கலங்களைப்பரப்பி † நகவூட்ட நந்தும் விருந்துகள்; எ-று

௬௩ பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக பொருளி
னிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியாற்
போற்றாதார் போற்றப் படும்.

---

* காங்கி வடமொழிச் சிதைவு.

† 'நன்குநகவூட்ட' என்பதும் பாடம்.

இ-ள்; பழிபட வாழாமை ஒருவன் தன் மக்கட்பேற்றானே அறிக; ஒருவன் தனக்குநண்பல்லாமை கேடுவந்தால் அறிக; பொருள்வருகின்ற நன்மையானே அவனதாக்கம் அறிக; ஒருவன் புகழ்படவழங்குமாயிற் றன் பகையாலும் போற்றப்படும்; எ-று. (சுக)

சுச கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றும் பெண்ணி
னுருவின்றி மாண்ட வுளவா மொருவழி
நாட்டுள்ளு நல்ல பதியுள பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட்டே யுள.

இ-ள்; தன்கண்ணுள்வைத்துக் காணுமிடம் அவனுற் காதலிக்குங் காதலையுடைத்தாம்; பெண்களுள் வடிவின்றியே குணமாண்டன உளவாம்; ஒருவனுட்டுள்வைத்தும் ஒரு கூற்றுள்ளே நல்லபதி உளவாம்; பாட்டுக்கள் பலவற்றுள்ளும் பெருமையெய்தும் பாட்டுக்களுள; எ-று. (சுஉ)

சுரு திரியழற் காணிற் றொழுவர் விறகி
னெரியழற் காணி னிகழ்ப—வொருகுடியிற்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றா
னிளமைபா ராட்டு முலகு.

இ-ள்; திரியானெரியுஞ் சுடரைக்கண்டாற் றொழுவர்; விறகானெரியுஞ் சுடரைக்கண்டால் இகழ்வர்; அவைபோல, ஒருகுடிப்பிறந்து கல்வியின்றியே மூத்தானைக்கைவிட்டு இளையானுயினும் கற்றானையே பாராட்டுவர்உலகத்தார்; எ-று. (சுரு)

சுசு கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
முளைக்குழா நீருண்டே லுண்டாந் திருக்குழா
மொண்செய்யாள் பார்த்துறி னுண்டாகு மற்றவ
டுன்புறுவா ளாகிற் கெடும்.

இ-ள்; கைப்பொருளுடையான் காதலித்தது உளதாம்; வித்தின் முளைக்கூட்டம் நீருண்டாயின் உளதாம்; செல்வக்கூட்டம் ஒள்ளிய செய்ய பூமகள்பரிவுறின்ஒருவற்குஉளதாம்;மற்றவள்காதலியாது துன்புறுமாயின் அச்செல்வத்தின் றொகுதி அவற்குக் கெடும்; எ-று. (சுச)

சுஎ ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலத்துப்
புல்லினு னின்புறூஉங் காலேய நெல்லி
னரிசியா னின்புறூஉங் கீழெல்லாந் தத்தம்
வரிசையா னின்புறூஉ மேல்.

இ-ள்; ஊனையுண்டு புலிநிறம்பெறும், நீருடைய நிலத்தெழுந்த புல்லினான் இன்புறாஉம் நிரைமுதலாயின; அதுபோல, நெல்லினரிசியாற் பசி தீர்ந்து இன்புறுவர் கீழாயினார்; மேலாயினார் தத்தந்தகுதிச்செயலான் இன்புறுவர்; எ-று. (சுரு)

சுஅ பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை யென்பெறினு
முன்னவா முன்ன மறிந்தார்கட்—கென்னு
மவாவா மடைந்தார்கட் குள்ளந் தவாவா
மவாவில்லார் செய்யும் வினை.

இ-ள்; கருத்தான் ஆராய்ந்தறியாதார்க்குப் பின்பு நடுக்கத்தைச் செய்யும் வினைகள் தோன்றுவாம்; அறிந்தார்க்குப் பின்னதிர்க்கும் செய்வினைகள் என்பெறினும் முன்னவாகத் தோன்றும்; எல்லாவாற்றானும் அவாவேயாகும் யாதானும் ஒன்றனை அடைந்தார்க்கு உள்ளம்; கெடாவாம் அவாவில்லார் செய்யும் வினைப்பயன்கள்; எ-று. (சுசு)

சுகூ கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர்—பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் செய்தாரி
னல்லர் சிதையா தவர்.

இ-ள்; கைப்பொருள் இல்லாதார் கைப்பொருளுண்டாகிக்காப்பாரின் மிக நல்லர்; அப்பொருளை வைத்திழப்பாரின் வறியவர் மிக நல்லர்; வெகுண்டெழுந்து வைதாரின் மிக நல்லர் பொறுப்பவர்; உதவியைச் செய்தாரின் நல்லர் அதனை மறவாதார்; எ-று.

அல்லதூஉம் 'செய்தாரினல்லர் சிதையா தவர்' என்பது அறஞ்செய்தாரின் நல்லர் அவ்வறத்தை யழியாதார் என்றுமாம். (சுஎ)

எ0 மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—யகனீர்ப்
புலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

இ-ள்; மகனது குணமே பிறர்க்கறிவிக்கும் தந்தையது நற்செய்கையை; ஒருவன் முகமே உரைக்கும் அவன் மனத்தின்கணுள்ள காதலை; அகன்ற நீர்மையினையுடைய புலத்தினது நன்மையைப் புலத்தின்கட் புக்கவன் உரைக்கும்; நிலத்தின் மக்களது தன்மையை மழை பெய்தும் பெய்யாதும் அறிவிக்கும்; எ-று. (சுஅ)

௭௧ பதிநன் றுபல்லா ருறையி னொருவன்
மதிநன்று மாசறக் கற்பி—னுதிமருப்பி
னேற்றான்வீ றெய்து மினநிரை தான்கொடுக்குஞ்
சோற்றான்வீ றெய்துங் குடி.

இ-ள்; ஊர் நன்றாம் பலரும் உறைவாராயின்; ஒருவன் மதிநன்றாம் மாசற நூல்கற்றானாயின்; கூரிய கோட்டினையுடைய ஏற்றினானே சிறப்புப் பெறும் இனநிரைகள்; பிறர்க்குக் கொடுக்குஞ் சோற்றினானே சிறப்புப் பெறுந் தான்பிறந்த குடி; எ-று. (௬௯)

௭௨ ஊர்ந்தான் வகைய கலினமா நேர்ந்தொருவ
னாற்றல் வகைய வறஞ்செய றொட்ட
குளத்தனைய தூம்பி னகலங்க டத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு.

இ-ள்; எறிஞன் வகையவாயிருக்கும் முகக்கருவியையுடைய புரவிகள்; தலைப்பட்டு ஒருவனாற்றுதல்வகையவாம் அறஞ்செய்கை; தோண்டின குளத்தினளவினவாம் தூம்பின்வாய்கள்; தத்தம் வருவாய்க்குத் தக்க வகைய வாயிருக்கும் மனைவாழ்வார்செய்கை; எ-று. (௭௰)

௭௩ ஊழியும் யாண்டெண்ணி யாத்தன யாமமு
நாழிகை யானே நடந்தன—*தாழியாத்
தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர் வெட்கென்றார்
வெஞ்சொலா லின்புறு வார்.

இ-ள்; ஊழிகளும் யாண்டுகளானே எண்ணப்பட்டு யாப்புற்றுக் கழிந்தன; யாமங்களு நாழிகையானே எண்ணப்பட்டு யாப்புற்றுக்கழிந்தன; தெளிந்தார் மாட்டே நீட்டியாதே தெளிந்தனர் நல்லார்; வெள்ளிய அறிவினையுடையார் பிறர்க்கு இன்னாத வெஞ்சொற் சொல்லியே இன்புறுவர்; எ-று. (௭௧)

௭௪ கற்றான் றளரி னெழுந்திருக்குங் கல்லாத
பேதையான் வீழ்வானேற் கான்முரியு மெல்லா
மொருமைத்தான் செய்த கருவி தெரியுங்காற்
†பொய்யாவித் தாகி விடும்.

---

*"முரசு முழங்கு நெடுநகர் அரசு துயிலீயாது" (பதிற்றுப்பத்து உ-உ) என்புழித் துயிலீயாது என்பது துயிலாது என்னும் வினைத்திரிசொல் என்றார் அதனுரைகாரர்; அதுபோல இதனையுங்கொள்க.

† 'வீயா வித்தாகி' எனவும் பிரதிபேதம்.

இ-ள்; கல்வியையுடையவன் கேடுற்றானாயின் அதனானிடர்ப்படான் எழுந்திருக்கும்; கல்லாத பேதையான்கேடுற்றானாயிற் கான்முரிந்தார்போல எழமாட்டான்; ஒருவன் ஒருபிறப்பிற் றான் செய்தனவெல்லாம் மறுபிறப் பின்கண் நுகருநுகர்ச்சிக்குக் காரணங்களாம்; மெய்யாகிய வுணர்ச்சி பழுது படாத வீட்டுக்கு வித்தாம் ஆராயின்; எ-று. (எஉ)

எரு தேவ ரனையர் புலவருந் தேவர்
தமரனைய ரோரூ ருறைவார் தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்
கற்றாரைக் காத லவர்.

இ-ள்; தேவரே போல்வர் அறிவுடையார்; தேவர் தமரேயனையர் அவ ருறையும் ஊரின்கண் வாழ்வார்; அத்தமருள் வைத்துத் தேவரால் அருள் பெற்றவரோடு ஒப்பர் அச்சொல்லியவரைப் பேணியொழுகுவார்;கற்றாரோடு ஒப்பர் கற்றாரைக் காதலித்தொழுகுவார்; எ-று. (எ௩)

எச தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே மருத்துவன்
சொல்லென்ற போழ்தே பிணியுரைக்கு நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக வதற்குரியான்
றாவெனிற் றாயம் வகுத்து.

இ-ள்; ஒருவனோடு கொண்ட நட்புத் தூர்ந்துவிடும், பொய்பிறந்த பொழுதே; பிணிக்கு மருந்து செயவோன் சொல்லுக என்ற பொழுதே பிணியுற்றவன் றானுற்ற பிணியைச் சொல்லும்; அதுபோல, அறிவுடைய நல்லார் இப்பெற்றிப்பட்ட தீவினைகளை விடுக என்றபொழுதே விட்டொ ழிக; ஒருபொருட்குரியான் தாவென்றால் அவனுரிமையைக் கூறிட்டுவிடுக; எ-று. விடுகவென்னுஞ் சொல்லை இதற்கும் வருவித்துக்கொள்க. (எச)

எஎ நாக்கி னறிப வினியதை மூக்கினான்
மோந்தறிப வெல்லா மலர்களு நோக்குள்ளுங்
கண்ணினாற் காண்ப வணியவற்றைத் தொக்கிருந்
தெண்ணினா னெண்ணப் படும்.

இ-ள்; நாவினானே அறிப இனிய பொருள்களை; மூக்கினானே மோந் தறிப எல்லாப் பூவினையும்; நோக்குண்டென்று கருதப்படுங் கண்ணினாற் காண்ப அணிய பொருள்களை; கண்ணாற் காணப்படாது செய்பொருள்க ளைப் பலருங் கூடியிருந்து அறிவானே ஆராயத்தகும்; எ-று. (எரு)

எஅ சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாந்
தாவாத வில்லை வலிகளு—மூவா
திளமை யிசைந்தாரு மில்லை வளமையிற்
கேடின்றிச் சென்றாரு மில்.

இ-ள்; பிறந்த உயிரெல்லாவற்றுள்ளும் சாவாத உயிர்கள் யாவுமில்லை; வலிகளுள்ளுங் கெடாத வலிகளில்லை; மூத்துக்கழியாத இளமையைப் பெற்றாரும் இல்லை; செல்வத்தாற் கேடின்றிச்சென்றாருமில்லை எ-று.

எகூ சொல்லா னறிப வொருவனை மெல்லென்ற
நீரா னறிப மடுவினை யார்கண்ணு
மொப்புரவி னானறிப சான்றாண்மை மெய்க்கண்
மகிழா னறிப நறா.

இ-ள்; ஒருவனது நன்மையையும் தீமையையும் அவன் சொல்லானே அறிப; மெல்லென்று நொய்தாய நீரானறிப மடுவினது நன்மையை; அது போல, யார்மாட்டுஞ் செய்யும் ஒப்புரவினானே அறிப ஒருவனது சான்றாண்மையை; உடம்பின் கணுள்ள களிப்பானே அறிப நறாவுண்டமையை; எ-று.

அ0 நாவன்றோ நட்பறுக்குந் தேற்றமில் பேதை
விடுமன்றோ வீங்கப் பிணிப்பி னவாஅப்
படுமன்றோ பன்னூல் வலையிற் கெடுமன்றோ
மாறு ணிறுக்குந் துணிபு.

இ-ள்; நா நட்புக்கெடுக்குமன்றோ: ஆதலால் அதனைப் பாதுகாக்க; தெளிவில்லாத பேதை இறுகவே துன்பஞ்செய்து பிணிப்பிற் றங்கைப் பொருளை விடுமன்றோ; தன்னுசை அகப்பட்டுக்கெடுமன்றோ பலநூல்களையுங் கற்றுவல்ல வலையின்கண்ணே; ஒருவன் தன்னைக்கெடுக்குமன்றோ எல்லாரோடும் பகைகொள்ளும் பகைமையின்கட் டன்னை நிறுத்துந் துணிபு எ-று.

அக கொடுப்பி னசனங் கொடுக்க விடுப்பி
னுயிரிடை யீட்டை விடுக்க வெடுப்பிற்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்.

இ-ள்; ஒருவற்குக் கொடுப்பானாயின் றன்னுணவினைக் கொடுக்க; ஒன்றனை நீக்குவானாயின் ஒன்றனுயிர்க்கு இடையூறு வந்தனவற்றை நீக்குக; சிலரை எடுப்பானாயிற் றன்கிளைகளுட் டாழ்ந்தாரை எடுக்க; ஒன்றனைக்கெடுப்பானாயிற் றன்மனத்துள்ள வெகுளியைக் கெடுத்துவிடுக; எ-று. (எகூ)

அ௨ நல்லு மிளமைமை நல்குரவின் கீழ்ச்சாங்
*குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் பரமல்லாப்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

இ-ள்; வடிவழகும் இளமையும் வறுமைவந்தவிடத்திற் கெடும்; குலனுங் குடிப்பிறப்புங் கல்லாமையுள தாயின் அவ்விடத்துக்கெடும்; வருவாயில்லாத குளத்தின்கீழ் விளையுநெற் கெடும்; மிக்கபண்டத்தின்கீழ்ப் பகடு கெடும்; எ-று. (அ௦)

அ௩ நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை—யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

இ-ள்; கல்வியான் நல்லொர்க்குந் தம்மூரென்று ஊரில்லை: எல்லாவூரும் பயன்படும்; நன்னெறிசெல்லும் அருந்தவர்க்குத் தம்மூரென்று ஊரில்லை: எவ்வூரின்கண்ணும பற்றுடையரல்லர்; கடையாயினோர்க்குந் தம்மூரென்று ஊரில்லை: பயன்படா; தங்கைப்பொருளுடையார்க்கும் எவ்வூரும் ஊராய்ப் பயன் படும்; எ-று (அக)

அ௪ கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்ற
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்ற
† மல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
‡ இல்லத்துத் தீங்கொழுகு வாள்.

இ-ள்; கற்றறியா வொருவர்க்குத் தம்வாயிற்சொற் கூற்றமாம்; மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காயே கூற்றமாம்; மற்றைத்தீவினைகளைச் செய்வார்க்கு அறககடவுளே கூற்றமாம்; ஒருவன் மனையின்கணிருந்து தீதாக ஒழுகுவாள் அவற்குக் கூற்றமாம்; எ-று. (அ௨)

---

* குலம் ஈண்டுவருணம்.

† “ அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும், பல்லவையோர் சொல்லும் பழுதன்றே” என்றார் இளங்கோவடிகளும் (சிலப்-வழக்குரை காதை).

‡ ‘இல்லிருந்து தீங்கொழுகு வாள்’ எனவும் பாடம்.

அரு நீரான்வீ றெய்தும் விளைநில நீர்வழங்கும்
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினங் கொண்டாரு
நாட்டான்வீ றெய்துவர் மன்னவர் கூத்தொருவ
னாடலாற் பாடு பெறும்.

இ-ள்; நீரினாற் சிறப்புப்பெறும் விளைநிலம்; கடலான்வரும் பண்டத்தானே பெருமைபெறும் பட்டினங்கள்; தாங்கள் கொண்டு ஆளப்படுகின்ற நாட்டினாற் சிறப்புப்பெறுவர் அரசர்; நாடகங்கள் வல்லானொருவன் ஆடுதலாற் பெருமை பெறும்; எ-று.

'பாடலாற் பாடு பெறும்' என்று பாடமோதுவாருமுளர். (அரு)

அசு ஒன்றாக்கல் பெண்டிர் தொழினல மென்று
நன்றாக்க லந்தண ருள்ளம் பிறனாரு
நாடாக்கன் மன்னர் தொழினலங் கேடாக்கல்
கேளி ரொரீஇ விடல்.

இ-ள்; ஒருமைப்பட்ட மனத்தாற் றங்கொழுநர் வழியேமுயன்றொழுகுதல் பெண்டிர்க்குத் தொழினலமாவது; எஞ்ஞான்றும் அறத்தினையேமுயன்றொழுகுதல் மறையவர்க்குக் கருத்தாவது; பிறனொரரசன் ஆளும் நாட்டினைக்கொள்ள முயறல் மன்னாது தொழினலமாவது; தமக்குக் கேட்டினை முயன்றொழுகுதலாந் தங்கேளிரைநீக்குதல்; எ-று. (அசு)

அஎ கள்ளாமை வேண்டுங் கடிய வருதலாற்
றள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியரோ டியார்மாட்டுங்
கொள்ளாமை வேண்டும் பகை.

இ-ள்; களவு காணாமை வேண்டும்; அஞ்சத்தகுந் துன்பத்தொடு வருதலாற் றனக்குத் தகுதியுடைய ஒழுக்கத்தை நீங்காமை வேண்டும்; சிறியாரோடு நட்புக்கொள்ளாமை வேண்டும்; யாவர்மாட்டும் பகைகொள்ளாமை வேண்டும்; எ-று. (அஎ)

அஅ பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக *வொட்டாரைக் கால மறிந்தாங்
கருக்குக யார்மாட்டு முண்டி சுருக்குக
செல்லா விடத்துச் சினம்.

* 'மாற்றாரை' எனவும் பிரதிபேதம்.

இ-ள்; நட்டாரை நன்மையின்கட் செலுத்திப் பெருக்குவிக்க; பகைவரைக் காலமறிந்து வலிசெய்க; யாவர் மனையகத்தும் உண்டலைத் தவிர்க; தனக்குச் செல்லாவிடத்திற் சினத்தைச் சுருக்குக; எ-று. (அசு)

அகூ மடிமை கெடுவார்க ணிற்குங் கொடுமைதான்
பேணாமை செய்வார்க ணிற்குமாம் பேணி
ஞாணின் வரைநிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த
தூணின்வரை நிற்குங் களிறு.

இ-ள்; கெடக்கடவார் மாட்டு முயற்சியின்மை நிற்கும்; பிறர் விரும்பாதன செய்வார்மாட்டுக் கொடுமை நிற்கும்; விரும்பப்பட்ட நாணெல்லையின்கண் நிற்பர் நற்பெண்டிர்; நட்டு அமைவுடைத்தாய தூணின்கண் நிற்பது களிறுவது; எ-று. (அஎ)

கூ0 மறையறிப வந்தண் புலவர் முறையொடு
வென்றி யறிப வரசர்க ளென்றும்
வணங்க லணிகலஞ் சான்றோர்க் கஃதன்றி
யணங்கல் * வணங்கின்று பெண்.

இ-ள்; மறைநூலை அறிவர் அந்தணராய புலவர்; நடுவு செய்கையொடு பகைவரை வெல்கையை அறிவர் அரசர்; எஞ்ஞான்றும் எல்லார்க்கும் பணிந்தொழுகுதல் சான்றோர்க்கு அணிகலமாவது; அப்பெற்றியின்றித் தெய்வத்தைச் சார்ந்தொழுகுதலின்றியே கொழுநனையே தொழுவது பெண்ணாவது; எ-று. (அஅ)

கூக பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பினும்
பெட்டாங் கொழுகும் †பிணையிலி—முட்டினுஞ்
சென்றாங்கே சென்றொழுகுங் காமங் கரப்பினுங்
கொன்றான்மே னிற்குங் கொலை.

இ-ள்; பெண்டிர்க்குச் சொல்லிய ‡கற்புடைமை நெறியின்கண்ணே யுள்ளாய் ஒழுகும் குணமுடையாள்; எல்லாக்காவலும் உளவாயினும் தானினைந்தபடியே ஒழுகும் நல்லாரான் விரும்பப்படாதாள்; இடையூறுபட்டு முடியாதாயினும் சென்றவிடத்தே சென்றொழுகுங் காமமானது; மறைக்கினுங் கொன்றான்மேலே வெளிப்படுங் கொலையானது; எ-று (அகூ)

---

* 'வணங்குவ' எனவும் பாடம்.
† 'பிணியிலி' எனவும் பாடம். பிணி - பிணிப்பு.
‡ 'உண்மைநெறியின்கண்ணே' எனவும் பாடம்.

கூஉ வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியா
ரின்கண் பெருகி னினம்பெருகுஞ் சீர்சான்ற
மென்கண் பெருகி னறம்பெருகும் வன்கட்
கயம்பெருகிற் பாவம் பெரிது.

(இ-ள்; ஒருவர்க்கு அஞ்சாமை பெருகின் வலிபெருகும்; பால்போன்ற மொழியினையுடைய மனைவியர் கண்ணோட்டம் பெருகிற் சுற்றம் பெருகும்; புகழமைந்த *அருள்பெருகின் அறவினை பெருகும்; வன்கண்மையுடைய கீழ்மைக்குணம் பெருகிற் பாவம் பெரிது; எ-று (கூ0)

கூ௩ இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றங்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றந்
தமரல்லார் கையகத் தூண்.

(இ-ள்; இளமைக்காலத்துக் கல்லாதொழிதல் குற்றமாம்; வருவாயில்லாத காலத்து வண்மை குற்றமாம்; தனக்குச் சுற்றத்தாரில்லாத காலத்துப் பிறரொடு வெகுடல் குற்றமாம்; தமரல்லாதார் கையகத்து உணவையுண்டலுங் குற்றமாம் ; எ-று. (கூக)

கூச எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக்†கடை.

(இ-ள்; நன்மை பயந்ததாயினும் எல்லாவிடத்துங் கொலைதீதாம் ; புதல்வரைக் கல்லாது வளரவிடுதல் தீதாம்; நல்லாருடைய வடிவழகு தீதாம் நாணில்லாராய் நிற்பின் ; தாம் பிறந்த குலந்தீதாம் குலத்துக்குத்தக்க ஒழுக்கமழிந்தவிடத்து ; எ-று. (கூஉ)

கூ௫ ஆசார மென்பது கல்வி யறஞ்சேர்ந்த
போக முடைமை பொருளாட்சி‡யார்கண்ணுங்
கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வா
னுண்ணோட்ட மின்மையு மில்.

* 'வளம்பெருகின்' எனவும் பாடம்.
† 'யழிந்தவிடை' எனவும் பாடம்.
‡ "ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந், தேர்ந்துசெய் வஃதே முறை" (திருக்குறள்-௫௪௧.)

இ-ள்; ஒருவற்குக் கல்வியின் பயனாவது ஆசாரமென்று சொல்லப்படுவது; பொருளாட்சியின் பயனாவது அறத்தைச்செய்து இன்பத்தை நுகர்தல்; எவர்மாட்டுங் கண்ணோடாமை நடவுசெய்தன் முறைமையாவது; ஆராய்ந்து அரசினையாள்வான் *மனத்தாலாராயாது ஒன்றனையுஞ் செய்த தில்லை; எ-று. (௬௫)

௬௬ கள்ளி னிடும்பை களியறியு நீரிடும்பை
புள்ளினு ளோங்க லறியு நிரப்பிடும்பை
பல்பெண்டி ராள னறியுங் கரப்பிடும்பை
கள்வ னறிந்து விடும்.

இ-ள்; கட்பெருமையான்வரும் இடும்பையைக் கள்ளுண்டு களிப்பவன் அறியும்; நீர்பெருமையான் வரும் இடும்பையைப் புள்ளினுள் வைத்துச் சாதகப்புள்ளறியும்; பொருளைத்தேடும் இடும்பையைப் பல்பெண்டிராளன் அறியும்; காத்தலருமையின் கண்வரும் இடும்பையைக் கள்வன் அறியும்; எ-று. (௬௬)

௬௭ வடுச்சொ னயமில்லார் வாய்த்தோன்றுங் கற்றார்வாய்ச்
சாயினுந் தோன்றா கரப்புச்சொற் றீய
பரப்புச்சொற் சான்றோர்வாய்த் தோன்றா கரப்புச்சொற்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும்.

இ-ள்; பிறர்க்குப் பழியாயின கூறுதல் ஈரமில்லாதார் வாயிற் றோன்றும்; கற்றார்வாயின்கட் சாயினும் உளவாகா வஞ்சனைச்சொல்; தீயவற்றைப்பரப்புஞ்சொல் அமைந்தார்வாயின்கட் டோன்றா; இரந்தார்க்கு இல்லையென்னுங் கரப்புச்சொற் கீழ்மக்கள்வாயின்கட் டோன்றும்; எ-று. (௬௫)

௬௮ வாலிழையார் முன்னர் வனப்பில்லார் பாடிலர்
சாலு மவைப்படிற் கல்லாதான் பாடிலன்
†கற்றா னொருவனும் பாடிலனே கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின்.

இ-ள், வாலிய அணியையுடைய மகளிர்முன்னர் அழகில்லாதார்பெருமையிலர்; நிரம்பிய அறிவினையுடைய அவையிற்புக்காற் கல்லாதான் பெருமையிலன்; கற்றவனும் பெருமையிலன் கல்லாதார் முன்னரும் : பேதையார் முன்னரும் ; எ-று. (௬௮)

* 'கருத்துள்நாடாது' எனவும் பாடம்.

† கற்றானொருவனும் கல்லாதார் முன்னர்ப்படிற் பாடிலனே எனவும், கற்றானொருவனும் பேதையார்முன்னர்ப்படிற்பாடிலனே எனவும் பிரித்து முன்னவற்றோடு நான்காக்குக.

௯௯ மாசு படினு மணிதன்சீர் குன்றுதாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண்—மாசொட்டும்
*பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

இ-ள்; நன்மணி மாசுபட்டனவாயினுந் தன்விழுப்பங் குன்றுதாம்; கழுவிக்கொள்ளினும் இரும்பின்கண் மாசடையும்; தளைமுதலாயினவற்று ள்ளிட்டு ஒறுப்பினும்: அறிவுகொளுத்தி அவனறிவை விளக்கினும் கீழாயினான் றன்செய்கைகளாங்கீழ்மையைக் காட்டிவிடும்; எ-று. (௯௭)

௧௦௦ எண்ணொக்குஞ் சான்றோர் மரீஇயாரிற் றீராமை
புண்ணொக்கும் போற்றா ருடனுறைவு—பண்ணிய
யாழொக்கு நட்டார் கழறுஞ்சொல் பாழொக்கும்
பண்புடையா ளில்லா மனை.

இ-ள்; அறிவினையொக்கும் மருவியமைந்தாரை நீங்காமை; புண்ணினையொக்கும் பகைவருடன் உறைந்தொழுகுதல்; பண்ணிய யாழோசையை யொக்கும் நட்டார்கழறுஞ்சொல்; குணமுடைய மனையாளை இல்லாத மனை பாழினையொக்கும்; எ-று. (௯௮)

௧௦௧ ஏரி சிறிதாயி னீரூரு மில்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணூரு மேலைத்
தவஞ்சிறி தாயின் வினையூரு மூரு
முரன்சிறி தாயிற் பகை.

இ-ள்; குளஞ்சிறிதாயின் நீர்போம்; மனையிற்புகும வருவாய் சிறிதாயின் மனையாள் கொழுநனை மதியாது மேற்கொள்ளும்; முன்னாட்செய்த தவஞ்சிறிதாயிற் றீவினைவந்து மேற்கொள்ளும்; ஒருவன் வலி சிறிதாயிற் பகைவந்தடரும்; எ-று. (௯௯)

நான்மணிக்கடிகை மூலமும் உரையும்.

முற்றின.

---

* கீழ் தன்னைப்பாசத்துளிடினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும் கீழ் தன்னைவிளக்கினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும் பிரித்து முன்னவற்றோடு நான்காக்குக.

Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

## விற்கப்பெறும் புத்தகங்கள்.

### சங்கப்பதிப்பு.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும். ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பு அணியிலக்கணங்கள் (விசாகப்பெருமாளையர் பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை)... | 0 | 8 | 0 |
| 4. | வைத்திய சாரசங்கிரகம் ... ... | 3 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... | 2 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 3 | 0 | 0 |
| 7. | தோத்திரத்திரட்டு ... ... | 0 | 2 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி (உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்) ... ... | 6 | 0 | 0 |
| 9. | அபிதானசிந்தாமணி ... ... | 7 | 0 | 0 |
| | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு செலெக்ஷன் ... ... | 0 | 4 | 0 |

### செந்தமிழ்ப் பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| *1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| *2. | கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்)... | 0 | 3 | 0 |
| *3. | வளையாபதி செய்யுட்கள் | | | |
| *4. | புலவராற்றுப்படை (திருக்குருகூர் இரத்தின கவிராயர் இயற்றியது.) ... ... | 0 | 3 | 0 |
| *6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது உரையுடன் ... | 0 | 4 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | அநுமான விளக்கம் ... ... | 0 | 4 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... | 0 | 1 | 0 |
| *11. | விவசாயரசாயண சாஸ்திரச்சுருக்கம் ... ... | 0 | 6 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... | 0 | 4 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 3 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... | 0 | 4 | 0 |
| 17. | சுகசந்தர்சன தீபிகை ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்.) ... ... | 0 | 6 | 0 |
| 22. | திருக்கலம்பகம் (ஷை) ... ... | 0 | 6 | 0 |
| †23. | விக்கிரமசோழனுலா ... ... | 0 | 2 | 0 |
| †24. | குருமொழிவினாவிடை ... ... | 0 | 1 | 0 |
| †25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை ... | 0 | 1 | 0 |
| †26. | திருத்தணிகைத் திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை ... ... | 0 | 3 | 0 |
| 28. | சந்திராலோகம் ... ... | 0 | 2 | 0 |
| 29. | சோழவம்ச சரித்திரச்சுருக்கம் ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... | 0 | 2 | 0 |
| 31. | பாண்டியம் ... ... | 0 | 4 | 0 |

## வேறு பதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மணிமேகலை ... ... | 5 | 0 | 0 |
| 2. | பாரதச்சுருக்கவசனம் ... ... | 1 | 8 | 0 |

* ஸ்டாக் இல்லை, † சீக்கிரம் வெளிவரும்.